

(எஸ்.ஜீவராஜா - ஆர்.குணா)

கோலாலம்பூர், ஜூலை 11- நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த கின்றாரா தமிழ்ப்பள்ளி எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு சுமூகமான முறையில் தீர்வு காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பக்கம் 13

# கின்றாரா தமிழ்ப்பள்ளி விவகாரம்

# வதந்தி பரப்ப வேண்டாம்

முதல் பக்கத் தொடர்ச்சி

## கின்றாரா தமிழ்ப்பள்ளி விவகாரம்...

எனவே தேவையில்லாமல் வதந்திகளை பரப்பி மேலும் குழப்பமடைய செய்ய வேண்டாம். சுமூகமான தீர்வு காண அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. கின்றாரா தமிழ்ப்பள்ளியில் தற்போது 700 மாணவர்கள் பயின்று வருகின்றனர். அங்கு மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. சாலை விரிவாக்கப் பணிகளுக்கு வழிவிடும் வகையில் அந்தப் பள்ளியின் 3,000 சதுர அடியை மேம்பாட்டாளருக்கு ஒதுக்கித் தர வேண்டும் என்று கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் கேட்டுக் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. இதனால் பள்ளியின் பாலர்பள்ளி சிற்றுண்டிச்சாலை உட்பட சிலபகுதிகள் உடைபடலாம் என்று செய்திகள் வெளியாகின. ஆனாலும் அந்தப் பள்ளியை உடைப்பதற்கான இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று பத்து நாடாளுமன்றத் தொகுதி கெஅடிலான் உறுப்பினர் கே.பிரபாகரன் தெரிவித்தார்.

கின்றாரா தமிழ்ப்பள்ளி விவகாரத்தில் என்ன நடக்கிறது என்பதை தெரிந்து கொண்ட பின்னர் அறிக்கைகளை வெளியிடுங்கள். அதை விடுத்து பொய்யான தகவல்களை வெளியிட்டு மக்களை குழப்ப வேண்டாம். கின்றாரா தமிழ்ப்பள்ளி உடைப்படுகிறது என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று அவர் கேள்வியை எழுப்பினார். சாலை விரிவாக்கத்திற்கு வழிவிடும் வகையில் பூச்சோங் கின்றாரா தமிழ்ப்பள்ளி நிலத்தின் ஒரு பகுதியை எடுத்து கொள்ள மேம்பாட்டு நிறுவனம் கோரிக்கை முன் வைத்துள்ளது. அதற்கு இன்னும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. ஆனால் அதற்குள் வதந்திகளை பரப்ப வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே கின்றாரா தமிழ்ப்பள்ளி வாரியத் தலைவர் கோபி குருசாமி, பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பன்னீர் செல்வம் ஆகியோர் பள்ளிக்கு எதிராக தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர். இது தொடர்பில் அவர்கள் கோலாலம்பூர் டாங் வாங்கி போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர்.

நான்தான் எல்லாம். நான் அடுத்த ஜெயலலிதா என்றெல்லாம் பேச தொடங்கிவிட்டார். தன்னை ஜெயலலிதா உடன் எடப்பாடி ஒப்பிட தொடங்கிவிட்டார்.மணியான மாஜி அமைச்சர்கள் உட்பட 6 மாஜிக்கள் எடப்பாடியை சந்தித்து பேசி உள்ளனர். லோக்கல் தொண்டர்கள் பிரஷர் காரணமாக போய் பேசி உள்ளனர். அவரிடம் நெருக்கமாக இருந்தவர்களே எடப்பாடியிடம் போய் பேசி உள்ளனர். எவ்வளவு நாள் எடப்பாடி நான்தான் எல்லாம் என்று பேசிக்கொண்டு இருக்க முடியும்.

இதை ஓ பன்னீர்செல்வம் தூண்டிவிடவில்லை. அதை தேர்தல் ரிசல்ட்தான் தூண்டி விட்டு உள்ளது. எடப்பாடி ஆதரவாளர்களுக்கு உள்ளேயே தற்போது ஒற்றுமைக்கான உணர்வு இல்லை. இரண்டாம் கட்ட தலைவர்கள் சுயமாக உணர்ந்து கொண்டனர். இதை ஓ பன்னீர்செல்வம் தூண்டிவிடவில்லை. அதை தேர்தல் ரிசல்ட்தான் தூண்டி விட்டு உள்ளது.

எடப்பாடி ஆதரவாளர்களுக்கு உள்ளேயே தற்போது ஒற்றுமைக்கான உணர்வு இல்லை. இரண்டாம் கட்ட தலைவர்கள் சுயமாக உணர்ந்து கொண்டனர். எடப்பாடி பழனிசாமி சில விஷயங்களை தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும்.

நான் மட்டும்தான் அதிமுக என்று இருக்க கூடாது என்று சீனியர் லீடர் அவரிடம் பிரஷர் கொடுத்து உள்ளனர். ஒரு மீட்டிங் மட்டும் போட்டால் போதும் அது எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக போய்விடும். அதனால்தான் எடப்பாடி மீட்டிங் போடாமல் அமைதியாக இருக்கிறார், என்று மூத்த பத்திரிகையாளர் பிரியன் தெரிவித்துள்ளார்.